**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2017

## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | பொருளியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.
- 1 -50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.


**பகுதி - I**

(1) பின்வருவனவற்றுள் நியமக் கூற்றாக அமைவது யாது?

i) அருமையான வளங்கள் இருப்பதனால் பொருளாதாரங்கள் பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றன.
ii) கடந்த காலங்களில் குறைவான வருமானம் பெறுவோரின் சதவீதம் உயர்வாகவுள்ளது
iii) பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்கு அதிகமாக அமைவது சந்தைப் பொருளாதாரத்திலாகும்
iv) கடன் அளவு அதிகரித்திருப்பது இலங்கையின் எதிர்கால அபிவிருத்திக்குப் பொருத்தமானதன்று
v) வள அருமையானது அமையச் செலவு தோன்றுவற்கு ஒரு காரணமாக அமைகின்றது (..................)

(2) ஓர் முயற்சியாளரின் உற்பத்தி நடவடிக்கையின் அமையச் செலவானது

i) உற்பத்தி நடவடிக்கையில் இழக்கப்பட்ட முயற்சியாளரின் வருமானம்
ii) உற்பத்தி நடவடிக்கையில் முயற்சியாளனால் செலவிடப்பட்ட பணச் செலவு
iii) உற்பத்தியின் போது ஏற்பட்ட காசுச் செலவு மற்றும் இழக்கப்பட்ட முயற்சியாளனது வருமானங்களும் காலமும்
iv) உற்பத்தியின் பொருட்டு முயற்சியாளனால் பெறப்படும் நேரடி நன்மைகள்
v) முயற்சியாளனால் தியாகம் செய்யப்பட்ட நேரம் (..................)




(3) இலவச வளங்கள் என்பது

i) இலவசமாகக் கிடைக்கின்ற ஆதன வளங்கள் ஆகும்
ii) உள்ளீடாகப் பயன்படுத்தக்கூடிய சூரிய ஒளி, பருவக் காற்று போன்றவையாகும்
iii) நிரம்பல் வரையறுக்கப்பட்ட அளவில் உள்ள வளங்களாகும்
iv) விருப்பங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அவசியமான வளங்களாகும்
v) அருமையான வளங்களாகும் (..................)

(4) பொருளாதாரம் ஒன்றினது உற்பத்தி இயல்தகவு எல்லையினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. படத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாட்டினால் கருதப்படுவது i) சோளம் உற்பத்தியில் இருந்து கரும்பு உற்பத்திக்கு வளங்கள் மறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது

ii) கரும்பு உற்பத்தியில் வளப்பயன்பாட்டு மட்டம் உயர்ந்துள்ளது
iii) கரும்பு உற்பத்தியில் வேலைவாய்ப்பு குறைந்துள்ளது
iv) சோளம் உற்பத்தியில் வேலையின்மை அதிகரித்துள்ளது
v) இருபொருள் உற்பத்தியிலும் பயன்படுத்தப்படா வளம் பயன்படுத்தப்பட்டுள்ளது

(5) எல்லா உற்பத்திகளிலும் சமமான வெளியீட்டினைக் கொடுக்கக் கூடிய வளங்கள் பயன்படுத்தப்படும் பொழுது அதன் விளைவாக உற்பத்தி சாத்திய வளைகோடு தொடர்பில் விபரிப்பது.

i) உற்பத்தியில் அதிகரிக்கும் அமையச் செலவு காணப்படும்
ii) உற்பத்தி சாத்திய வளையி உற்பத்திக்குக் குவிவாகக் காணப்படும்
iii) வள ஒதுக்கீட்டுத்திறன் கொண்ட புள்ளியில் உற்பத்திச் சேர்க்கை இடம் பெறும்
iv) உற்பத்தியில் நிலையான சந்தர்ப்பக்கிரயம் காணப்படும்
v) பெருளாதாரத்தில் வள அருமை காணப்படும் (..................)

(6) நுகர்வோன் வருமானம் 15 சதவீதம் வீழ்ச்சியுறும் போது குறிப்பிட்டதொரு பண்டத்தின் வருமானக் கேள்வி நெகிழ்ச்சி 0.25 ஆகவுள்ளது. நுகர்வோன் குறித்த பொருளின் கேள்வி அளவினை 800 அலகுகளில் இருந்து எவ்வளவு அலகுகளால் மாற்றுவர்?

i) 830 அலகுகளாக மாற்றுவர் ii) 770 அலகுகளாகக் குறைப்பர்
iii) 30 அலகுகளால் உயர்த்துவர் iv) 300 அலகுகளால் குறைப்பர்
v) 130 அலகுகளால் குறைப்பர் (..................)


(7) நிறுவனமொன்று சந்தைப்படுகின்ற பொருள் ஒன்றின் கேள்வி அளவிற்கும் நுகர்வோன் செலவிற்கு மிடையில் எதிர்கணிய தொடர்பு நிலவியது. குறித்த பொருள் தொடர்பாக சரியாக அமைவது

i) பண்டம் பூரண கேள்வி நெகிழ்ச்சியுள்ளது ii) பண்டம் கேள்வி நெகிழ்வற்ற பண்டமாகும்
iii) கிபன் பண்டமாக அமையும் iv) ஆடம்பரப் பண்டமாகும்
v) கேள்வி நெகிழ்ச்சி கூடிய பண்டமாகும் (..................)

(8) பண்டமொன்றின் நிரம்பல் சார்பில் மாற்றமேதும் இல்லாத நிலையில் குறிப்பிட்ட பண்டத்தின் விலை மற்றும் பரிமாற்றத் தொகை என்பன அதிகரித்தது. இதற்கு ஏதுவாக அமைந்த காரணி எது?

i) உற்பத்தி செலவில் ஏற்பட்ட ஓர் அதிகரிப்பு
ii) வளங்களின் விலைகளில் ஏற்பட்ட ஓர்வீழ்ச்சி
iii) நுகர்வோர் விருப்பத் தெரிவு முன்னுரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு
iv) உற்பத்தி தொழிநுட்பத்தில் ஏற்பட்ட ஓர் வீழ்ச்சி
v) நுகர்வோர் வருமானத்தில் ஏற்பட்ட ஓர் வீழ்ச்சி (..................)

QS=−200+5P




(9) கேள்விச் சார்பு $Qd = 800 - 5P$ எனவும் நிரம்பல் சார்பு எனவும் அமைந்த பண்டமொன்றின் மீது அரசு ரூபா 10 அலகுவரி விதிக்குமாயின் பின்வரும் சேர்க்கைகளில் சரியானது


| நுகர்வோர் செலுத்தும் விலை | உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் விலை | வரியின் பின் நுகர்வோன் செலவு மாற்றம் |
|---|---|---|
| 1) 105 ரூபா | 85 ரூபா | 1375 ரூபா அதிகரிப்பு |
| 2) 95 ரூபா | 100 ரூபா | 30000 ரூபா அதிகரிப்பு |
| 3) 105 ரூபா | 95 ரூபா | 1125 ரூபா வீழ்ச்சி |
| 4) 85 ரூபா | 105 ரூபா | 1125 ரூபா அதிகரிப்பு |
| 5) 100 ரூபா | 80 ரூபா | |

28875 ரூபா வீழ்ச்சி (..................)

(10) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டம் மீது சிறப்பு அலகுவரி விதிக்கப்படும் நிலைமையினை வரைபடம் காட்டுகின்றது.
வரிவிதியினால் ஏற்படும் விளைவுகளில் சரியான சேர்க்கை

எது?

| | உற்பத்தியாளர் மிகையில் ஏற்பட்ட மாற்றம் | அரசின் வரி வருமானம் | உற்பத்தியாளர் மிகை வரிச்சுமை |
|---|---|---|---|
| 1) | ரூபா 500 | ரூபா 3500 | ரூபா 3000 |
| 2) | ரூபா 3500 | ரூபா 3000 | ரூபா 500 |
| 3) | ரூபா 3500 | ரூபா 2500 | ரூபா 1000 |
| 4) | ரூபா 750 | ரூபா 4000 | ரூபா 1500 |
| 5) | ரூபா 3500 | ரூபா 300 | ரூபா 1000 |





(11) பின்வரும் வரைபடம் கணணிக்கான கேள்வி நிரம்பல் வளையிகளையும் E புள்ளியில் சந்தை சமநிலையடைவதனையும் காட்டுகின்றது. ஓரலகுக்கான கணணியின் தாராள இறக்குமதி விலை 45 ரூபா எனவும் கருதுக.
இறக்குமதியை முற்றாகத் தடை செய்வதற்கு அரசு

i) மிகைக் கேள்வி முழுவதையும் இறக்குமதி செய்யும் ii) இறக்குமதி உள்ளீட்டின் மீது 33 சதவீத வரியினை விதித்தல்
iii) உள்நாட்டு உற்பத்திப் பொருள் மீது 15 ரூபா வரி விதித்தல் iv) இறக்குமதிப் பொருள் மீது அரசு 33.33 சதவீத வரிவிதித்தல்
v) இறக்குமதி மீது சதவீத வரி விதித்தல் பொருத்தமானதாகும் (..................)

(12) விலைக்கேள்வி நெகிழ்ச்சியுள்ள உற்பத்திப் பொருள் மீது அலகு மானியம் வழங்கப்படுமாயின் பின்வருவனவற்றில் எவ்விதத்தில் விலை, தொகை மற்றும் நுகர்வோன் செலவு என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும்

| | விலை | தொகை | நுகர்வோன் செலவு |
|---|---|---|---|
| 1) | குறையும் | அதிகரிக்கும் | குறையும் |
| 2) | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| 3) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5) | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் |




(13) குறிப்பிட்ட பண்டமொன்றின் சந்தைச் சமநிலையினை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. ரூபா 50 இழிவு விலையில் தோன்றும் மிகை நிரம்பலினை அரசு கொள்வனவு செய்யுமாயின் பின்வரும் சேர்க்கைகளில் மிகச்சரியானது எது?

| | நுகர்வோர் மிகை மாற்றம் | உற்பத்தியாளர் மிகை மாற்றம் | சமூக நல இழப்பு |
|---|---|---|---|
| 1) | ரூபா 2000 | ரூபா 1500 | ரூபா 4000 |
| 2) | ரூபா 2500 | ரூபா 1500 | ரூபா 4500 |
| 3) | ரூபா 1500 | ரூபா 3500 | ரூபா 4500 |
| 4) | ரூபா 1500 | ரூபா 4500 | ரூபா 2000 |
| 5) | ரூபா 1500 | ரூபா 2000 | ரூபா 4500 |

(..................)

The National e-learning Portal for The General Education

(14) நபரொருவரின் வருமானம் அதிகரிக்கும் போது கோதுமை மாவிற்கான கேள்வியும் அதிகரிக்கின்ற அதே வேளை பொருளின் வருமான நெகிழ்ச்சி 0.25 ஆகவும் அமையுமாயின் அப்பொருள்

i) சாதாரண பொருளாகும் ii) ஆடம்பரப் பொருளாகும்
iii) கிபன் பொருளாகும் iv) இழிவுப் பொருளாகும்
v) அத்தியவசியப் பொருளாகும் (.................)

(15) பொருளொன்றின்சந்தைக் கேள்வி வளையி குத்தச்சுக்குச் சமாந்தரமாகவும் சந்தை நிரம்பல் வளையி கிடையச்சிற்குச் சமாந்தரமாகவும் காணப்படும் போது நிறுவனத்தின் உற்பத்திச் செலவில் ஏற்படும் அதிகரிப்பானது

i) சமநிலை விலை அதிகரிக்கும் சமநிலை அளவு வீழ்ச்சியடையும்
ii) நுகர்வோன் மிகை குறையும் உற்பத்தியாளர் மிகை பூச்சியமாகும்
iii) சமநிலை விலை குறையும் சமநிலை அளவு மாறாது
iv) நுகர்வோன் மிகை மாறாது உற்பத்தியாளர் மிகை மாற்றமடையும்
v) நிரம்பல் வளையியில் பெயர்ச்சி ஏற்படாது (.................)

(16) நிறுவனத்தின் மொத்த வருவாய் குறைவடைவது

i) நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்
ii) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்
iii) கேள்வி நெகிழ்வற்ற நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும்
iv) கேள்வி அலகு நெகிழ்ச்சியுள்ள நிலையில் விலை வீழ்ச்சியடையும் போதாகும்
v) கேள்வி நெகிழ்வுள்ள நிலையில் விலை அதிகரிக்கும் போதாகும் (.................)

(17) குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் மொத்த வெளியீடு அதிகரிக்கும் வேகம் அதிகமாக உள்ள போது

i) எல்லைச் செலவு அதிகரித்துச் செல்லும் ii) எல்லை உற்பத்தி எதிர்க்கணியப் பெறுமதியைப் பெறும்
iii) குறைந்து செல்லும் எல்லை விளைவு தொழிற்படும் iv) அதிகரிக்கும் எல்லை விளைவு தொழிற்படும்
v) அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு காணப்படும் (.................)

(18) எல்லைச் செலவென்பது

i) வெளியீட்டை மேலதிகமாக ஓர் அலகால் அதிகரிக்கும் போது மாறும் செலவில் ஏற்படும் மாற்றத்தின் அளவு ஆகும்
ii) மொத்தச் செலவு வளைகோட்டின் ஓர் புள்ளியில் இருந்து மூலத்திற்கு வரையப்படும் கோட்டின் சரிவாகும்
iii) மொத்த நிலையான செலவு வளைகோட்டின் ஓர் புள்ளியில் இருந்து மூலத்திற்கு வரையும் கோட்டின் சரிவாகும்
iv) மாறும் செலவு வளைகோட்டுப் புள்ளியில் இருந்து மூலப் புள்ளிக்கு வரையப்படும் கோட்டின் சரிவாகும்
v) சராசரி மாறும் செலவு வளை கோட்டிற்கும் சராசரி மொத்தச் செலவு வளை கோட்டிற்கும் இடையிலான வேறு பாடாகும் (.................)

(19) நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தல் வெளியீடு 250 அலகுகளாகவும் சராசரி நிலையான செலவு 20 ரூபாவாகவும் எல்லைச் செலவு 100 ரூபாவாகவும் அமைவதுடன் நிறுவனத்தின் சிக்கன இலாபம் 5000 ரூபாவாகவும் அமையுமாயின் நிறுவனத்தின் உற்பத்தியாளர் மிகை எவ்வளவாக இருக்கும்?

i) ரூபா 15000 ii) ரூபா 10,000 iii) ரூபா 5000
iv) ரூபா 25000 v) ரூபா 20,000 (.................)

(20) நிறுவனமொன்றினது சராசரிச் செலவானது நிறுவனம் எதிர்நோக்கும் சந்தை விலையினை விட உயர்வானதாக அமைகின்றது. இந்நிலையில் நிறுவனம் தொடர்ந்து தொழிலில் நீடித்திருக்கவில்லையாயின் சந்தை விலையானது.

i) நிறுவனத்தின் சராசரி நிலையான செலவை விட உயர்வாகவிருக்கும்
ii) நிறுவனத்தின் சராசரி மாறும் செலவை விட உயர்வாகவிருக்கும்
iii) எல்லைச் செலவு எல்லை வருமானத்திற்குச் சமனாக விருக்கும்
iv) சராசரி மாறும் செலவு சந்தை விலையிலும் குறைவானதாக விருக்கும்
v) சராசரி மாறும் செலவு சந்தை விலையிலும் உயர்வாக விருக்கும் (.................)

(21)நிறுவனம் ஒன்றினது சகல உள்ளீடுகளிலும் வீதாசார ரீதியில் மாற்றம் ஏற்படும் போது அதன் வெளியீடும் வீதாசார ரீதியில் மாற்றமடைந்ததனைக் குறிப்பது

i) அதிகரிக்கும் அளவுத்திட்ட விதியினையாகும் ii) குறையும் எல்லை விதியினையாகும்
iii) அளவுத்திட்ட விளைவு விதியினையாகும் iv) அளவுத்திட்ட சிக்கனங்களையாகும்
v) குறையும் அளவுத்திட்ட விளைவு விதியினையாகும் (..................)

(22) வர்த்தக சகடவோட்டமொன்றின் பின்னடைவுக்கட்டத்தின் போது பெரும்பாலும் நிகழக்கூடியது

i) மெய்யுற்பத்தி வேலையின்மை என்பன வீழ்ச்சியடையும்
ii) படிப்படியாக மெய்யுற்பத்தி வீழ்ச்சியடையும் பணவீக்கம் அதிகரிக்கும்
iii) மெய்யுற்பத்தி மற்றும் முதலீடுகள் படிப்படியாக வீழ்ச்சியடையும்
iv) மெய்யுற்பத்தி மற்றும் முதலீடுகள் படிப்படியாக அதிகரிக்கும்
v) முதலீடுகள் உயர்வடையும் வேலையின்மை அதிகரிக்கும் (..................)

(23) பொருளாதாரமென்று நிறைதொழில் மட்டத்தில் உள்ளபோது பின்வருவன வற்றுள் எது மொத்தக் கேள்வியில் ஒரு சுருக்கத்தை ஏற்படுத்தும்?

i) மெய்வட்டி வீதத்தில் ஓர் அதிகரிப்பு ii) வரி விதிப்பில் ஓர் வீழ்ச்சி
iii) அரசாங்கச் செலவில் ஒரு விருத்தி iv) இறக்குமதிகளில் ஓர் வீழ்ச்சி
v) ஏற்றுமதிகளில் ஓர் அதிகரிப்பு (..................)

(24) பொருளாதார மொன்றின் தேசியக் கணக்குகளில் அடிப்படை விலைகளில் மொத்தக் கூட்டிய பெறுமதி 4200 மில்லியன் டொலர்களாகும். இடைநிலை நுகர்வு 1100 மில்லியன் டொலர்களாகவும் உற்பத்தி மானியம் கழித்த வரி 250 மில்லியன் டொலர்களாகவும் காணப்படுகின்றதாயின் உள்நாட்டுற் பத்தியின் பெறுமதி

i) 2750 மில்லியன் டொலர்களாகும் ii) 4450 மில்லியன் டொலர்களாகும்
iii) 1350 மில்லியன் டொலர்களாகும் iv) 3100 மில்லியன் டொலர்களாகும்
v) 4000 மில்லியன் டொலர்களாகும் (..................)

The National e-Learning Portal for The General Education

(25) கற்பிதமான பொருளாதாரமொன்றின் வரிப்பெருக்கிக் குணகம் (K) - 1.5 ஆகுமெனின் எல்லை நுகர்வு நாட்டத்தின் (mpc) பெறுமதி எவ்வளவாகும்

i) 0.75 ஆகும் ii) 0.8 ஆகும் iii) 0.2 ஆகும்
iv) 0.50 ஆகும் v) 0.60 ஆகும் (..................)

(26) பொருளாதாரமொன்றில் அரசாங்கம் அரச செலவினங்களை 400 மில்லியனால் அதிகரிப்பதற்கும் வரிகளை 400 மில்லியனால் அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கின்றது. இதன் விளைவாக சமநிலைத் தேசிய வருமான மட்டம்

i) 800 மில்லியனால் அதிகரிக்கும் ii) 400 மில்லியனால் அதிகரிக்கும்
iii) பெருக்கியின் மடங்கால் மாற்றமடையும் iv) 250 மில்லியனால் குறையும்
v) வருமானத்தில் மாற்றம் ஏற்படாது (..................)

(27) ஒரு நாட்டின் மொத்த தேசிய விற்பனை செய்யக்கூடிய உற்பத்திக்கும் தேசிய சேமிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டிற்குக் காரணமாக அமைவது

i) தேறிய நடைமுறை மாற்றங்களாகும் ii) இடைநிலை நுகர்வு ஆகும்
iii) தேறிய முதன்மை வருமான மாகும் iv) இறுதி நுகர்வு ஆகும்
v) தேறிய ஏற்றுமதி ஆகும் (..................)

(28) பொருளாதாரமொன்றின் தேசிய வெளியீட்டின் பணப்பெறுமதி 15 சதவீதத்தினால் அதிகரிக்கும் அதேவேளை விலை மட்டத்தின் அளவு 8 சதவீதத்தினால் உயர்கின்றது. பணத்தின் புழக்க சுற்றோட்ட வேகம் மாறாத நிலையில் மெய் வெளியீட்டின் அளவு மற்றும் பண நிரம்பலின் அளவு என்பன எவ்வளவால் அதிகரித்திருக்கும்?

| மெய்வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு | பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு |
|---|---|

| | | |
|---|---|---|
| 1) | 7 சதவீதம் | 15 சதவீதம் |
| 2) | 8 சதவீதம் | 7 சதவீதம் |
| 3) | 15 சதவீதம் | 8 சதவீதம் |
| 4) | 10 சதவீதம் | 15 சதவீதம் |
| 5) | 8 சதவீதம் | 10 சதவீதம் |

(.................)

(29) பின்வருவனவற்றில் எச்சந்தர்ப்பம் பணத்திற்கான கேள்வியில் ஒரு அதிகரிப்பினை ஏற்படுத்தும்

| | விலை மட்டம் | வட்டி வீதம் | மெய்வருமானம் |
|---|---|---|---|
| 1) | அதிகரிப்பு | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 2) | வீழ்ச்சி | அதிகரிப்பு | அதிகரிப்பு |
| 3) | அதிகரிப்பு | வீழ்ச்சி | வீழ்ச்சி |
| 4) | அதிகரிப்பு | வீழ்ச்சி | அதிகரிப்பு |
| 5) | வீழ்ச்சி | வீழ்ச்சி | அதிகரிப்பு |

(.................)

(30) வங்கித் தொழில் முறையில் இயங்கும் வங்கி ஒன்றினது ஐந்தொகை கீழே தரப்படுகின்றது.

| பொறுப்புக்கள் | தொகை மில்லியன் ரூபா | சொத்துக்கள் | தொகை மில்லியன் ரூபா |
|---|---|---|---|
| கேள்வி வைப்புக்கள் | 4000 | வங்கியில் உள்ள காசு | 550 |
| | | மத்திய வங்கியில் உள்ள காசு | 250 |
| | | நிறைசேரி உண்டியல் | 200 |
| | | கடன்களும் முற்பணங்களும் | 3000 |
| மொத்தம் | 4000 | மொத்தம் | 4000 |

வங்கிகள் மிகை ஒதுக்குகள் எவற்றையும் பேணவில்லை எனவும் கருதுக. மேலே தரவுகளின் படி வைப்பாக்கப் பொருக்கிக் குணகத்தின் பெறுமதி யாது?

i) 5 ii) 10 iii) 20 iv) 8 v) 12.5 (.................)

(31) மத்திய வங்கியானது கொள்கை வட்டிவீதங்களில் ஒன்றான துணை நில் வைப்பு வசதி வீதத்தினை (SDFR) அதிகரிக்குமாயின்

i) அழைப்புப்பண வீதம் வீழ்ச்சியடையும்
ii) வங்கிகளின் திரவத்தன்மை அதிகரிக்கும்
iii) பொதுமக்களது கடனுக்கான கேள்வி குறையும்
iv) நாட்டின் பணநிரம்பல் அதிகரிக்கும்
v) நாட்டின் முதலீடுகள் அதிகரிக்கும் (.................)

(32) வணிக வங்கிகளின் உச்சமான திரவத்தன்மை கொண்ட வங்கிச் சொத்து

i) திறைசேரி உண்டியல்களாகும்
ii) முதலாந்தர ஒதுக்கு ஆகும்
iii) மத்திய வங்கியில் உள்ள வைப்பாகும்
iv) அரச பிணைகளும் ஆவணங்களுமாகும்
v) இரண்டாந்தர ஒதுக்கு ஆகும் (.................)

(33) நுகர்வில் போட்டித்தன்மையுடையதும் கொடுப்பனவைச் செலுத்தாதோரை நுகர்விலிருந்து விலக்க முடியாததுமான வளம்

i) தனியார் வளமாக இருக்க முடியாது
ii) பொதுவளமாக இருக்க முடியாது
iii) ஆதனவளமாக இருக்க முடியாது
iv) பொருளாதார வளமாக இருக்க முடியாது
v) பொதுப் பொருளாக அமையும் (.................)

(34) போட்டிச் சந்தை சமநிலை வெளியீட்டின் போது விலையானது எல்லைச் சமூகச் செலவை விட குறைவாக இருப்பதற்கு பின்வருவனவற்றில் எது உண்மையாகும்?

i) நிறுவனம் ஒன்று தனது உற்பத்தியின் போதேற்படும் வெளிவாரி நன்மையினைக் கருத்திற் கொள்ளவில்லை
ii) நிறுவனம் உற்பத்தியின் போதேற்படும் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளவில்லை
iii) நிறுவனம் நுகர்வின் போதேற்படும் வெளிவாரிச் செலவுகளைக் கருத்திற் கொள்ளவில்லை
iv) நிறுவனம் நுகர்வின் போதேற்படும் வெளிவாரி நன்மைகளைக் கருத்திற் கொள்ளவில்லை
v) உற்பத்தியில் வெளிவாரி நன்மைக்குச் சமனாக நுகர்வில் வெளிவாரிச் செலவுள்ள நிலையைக் கருத்திற் கொள்ளவில்லை

(.................)

(35) அரச பாதீட்டுக்கணக்கில் ஆரம்பக் கணக்கு மீதி என்பது

The National e-Learning Portal for the General Education

i) மொத்த வருமானத்திற்கும் வட்டி நீக்கிய செலவிற்குமிடையிலான மீதியாகும்
ii) மொத்தப் பெறுகைகளுக்கும் மொத்தச் செலவினங்களுக்கு மிடையிலான மீதியாகும்
iii) சமூல மீதியிலிருந்து கடன் தீர்த்தற் கொடுப்பனவைக் கழிக்க வரும் மீதியாகும்
iv) சமூல மீதிக்கும் வட்டி நீக்கிய நடைமுறைச் செலவிற்கும் இடையிலான மீதியாகும்
v) மொத்தப் பாதீட்டு மீதியில் இருந்து வட்டிக் கொடுப்பனவைக் கழிக்க வரும் மீதியாகும்(..................)

(36) தீயபண்டம் (Bad Goods) தீங்கிழைக்கும் பண்டம் (Demerit goods) ஆகிய பண்டங்களுக்கிடையில் காணப்படும் ஒருமைப்பாடு
i) இரு பண்டங்களும் நுகர்வில் பயனுடைய பண்டங்கள்
ii) இரு பண்டங்களும் நுகர்வில் பயனற்றவை
iii) இரு பண்டங்களும் விலை செலுத்தி நுகரப்படுபவை
iv) இரு பண்டங்களும் வெளிவாரி செலவுடையவை
v) இரு பண்டங்களும் சமூகத்திற்குத் தேவைப்படுவன (..................)

(37) இலங்கையின் வரிவிதிப்பு தொடர்பான தகவல்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது

| வருமான மட்டம் ரூபா | வரித்தொகை ரூபா |
|---|---|
| 500 000 | 50 000 |
| 700 000 | 140 000 |


மேற்படி தரவுகளின் படி வரிவிதிப்பானது
i) விருத்தி முறை வரியாகும் ii) தேய்வு முறை வரியாகும்
iii) விகித சம வரி விதிப்பாகும் iv) ஒடுங்கு முறை வரி விதிப்பாகும்
v) மறைமுக வரி விதிப்பு முறையாகும் (..................)

(38) பின்வரும் அட்டவணையானது ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகள் ஓரலகு வளச்சேர்க்கையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக்கூடிய X மற்றும் y ஆகிய பண்டச் சேர்க்கையினைக் காட்டுகின்றது.

| பண்டம் | ரஷ்யா | சீனா |
|---|---|---|
| $x$ பண்டம் | *6* | *1* |
| y பண்டம் | *3* | *2* |

ஒவ்வொரு நாடும் தான் ஒப்பீட்டு நன்மையுடைய பண்ட உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடையுமாயின் வர்த்தகத்தின் மூலம் இரு நாடுகளும் நன்மையடையக் கூடிய பரிமாற்று வீதம்
i) $1x = 2y$ ii) $1x = 0.5y$ iii) $1x = 1y$ iv) $1x = 3y$
v) $1x = 0.4y$ (..................)

(39) உலக சந்தையில் இலங்கையின் கணனி மென்பொருளுக்கான சந்தையானது பின்வரும் வரைபடத்தினால் காட்டப்படுகின்றது. தரவுகளின் படி பின்வரும் சேர்க்கைகளில் மிகச் சரியானது எது?




| | இறக்குமதி செலவில் மாற்றம் | அரசின் இறக்குமதி வரி வருவாய் | வரிகாரணமாக இறக்குமதி வீழ்ச்சி |
|---|---|---|---|
| *1)* | ரூபா 125,000 | ரூபா 375,000 | 5000 அலகுகள் |
| *2)* | ரூபா 5000 | ரூபா 125,000 | 375000 அலகுகள் |
| *3)* | ரூபா 40,000 | ரூபா 375,000 | 4000 அலகுகள் |
| *4)* | ரூபா 20,000 | ரூபா 15000 | 15000 அலகுகள் |
| *5)* | ரூபா 100,000 | ரூபா 125,000 | 20 000 அலகுகள் |

(40) நாணய பெறுமதி தேய்வடைதல் என்பது

i) திருவகிக்கப்பட்ட நாணயமாற்று வீதத்தில் அதிகரிகளால் நிர்ணயிக்கப்படுவது

ii) நிலையான நாணயமாற்று வீதத்தில் அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்படுவதாகும்

iii) மிதக்கும் நாணயமாற்று வீதத்தில் தன்னிச்சையாக நிர்ணயிக்கப்படுவதாகும்

iv) மிதக்கும் நாணயமாற்று வீதத்தில் அதிகரிகளால் நிர்ணயிக்கப்படுவதாகும்

v) மெய்நாணய மாற்று வீதத்தில் விலைச் சீராக்கங்களால் நிர்ணயிக்கப்படுவதாகும் (.................)

(41) வர்த்தக நிலுவையினைச் சாதகமாக மாற்றும் நோக்கில் நாடு ஒன்று நாணயப் பெறுமதியிறக்கத்தில் ஈடுபடும் போது அது வெற்றியளிப்பதற்கு பொருத்தமான நிபந்தனை எது?

| | ஏற்றுமதியின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | இறக்குமதியின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | ஏற்றுமதி விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 1) | - 0.6 | - 0.2 | + 0.2 |
| 2) | - 0.2 | - 0.5 | + 0.1 |
| 3) | - 0.2 | - 0.4 | - 0.2 |
| 4) | - 0.8 | - 0.9 | + 1.3 |
| 5) | - 0.3 | - 0.2 | + 0.4 |

(............)

(42) தற்போது இலங்கை மத்திய வங்கியானது நாணயக் கொள்கை நடவடிக்கையின் தொழிற்பாட்டு இலக்காக

i) கொள்கை வட்டி வீதங்களைப் பயன்படுத்துகின்றது

ii) திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைப் பயன்படுத்துகின்றது

iii) விரிந்த பணக்கூட்டுக்களைப் பயன்படுத்துகின்றது

iv) துணைநில் வைப்பு வசதி வீதத்தினைப் பயன்படுத்துகின்றது

v) சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தினைப் பயன்படுத்துகின்றது (.................)

(43) பொருளாதார மொன்றின் ஏற்றுமதி விலைகள் 50 சதவீதம் அதிகரித்திருந்த அதே வேளை தேறிய பண்ட மாற்று வர்த்தக மாற்று வீதம் 25 சதவீதம் அதிகரித்திருந்ததெனில் இறக்குமதி விலைகள்

i) 20 சதவீதத்தினால் அதிகரித்திருக்கும் ii) 120 சதவீதத்தினால் அதிகரித்திருக்கும்

iii) 40 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கும் iv) 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கும்

v) 120 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கும் (.................)

(44) 2030களில் இலங்கை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நிலைத்து நிற்கும் அபிவிருத்திக் குறிக்கோள்களின் ஐந்து பரந்த விடயங்களை உள்ளடக்கிய தொகுதி எது?

i) வறுமை, பட்டினி, சமூகவிருத்தி, பொருளாதாரம் மற்றும் சூழல்

ii) மக்கள், கோள், சுபீட்சம், சமாதானம் மற்றும் பங்குடமை

iii) மக்கள், கோள், வறுமை, பொருளாதாரம் மற்றும் சூழல்

iv) சமூவிருத்தி, பொருளாதார விருத்தி, சூழல் பாதுகாப்பு, சமாதானம் மற்றும் சுபீட்சம்

v) சமாதானம், சுபீட்சம், வறுமை, பொருளாதாரம் மற்றும் சூழல் (.................)

(45) ஓர் நாட்டினது கினிக்குணகத்தின் பெறுமதி குறைந்து செல்வது

i) சமூகத்தின் மிக வறிய 10 சதவீதத்திலிருந்து சமூகத்தின் மிக செல்வந்த 10 சதவீதத்தை நோக்கிய வருமான மீள்பங்கீட்டைக் குறிக்கும்

ii) நாளொன்றிற்கு 2 டொலருக்கும் குறைவான வருமானம் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளமையக் குறிக்கும்

iii) சமூர்த்திக் கொடுப்பனவின் அள குறைவடைந்துள்ளமையை குறிக்கும்

iv) லோறன்ஸ் வளையி $45^0$ கோட்டிலிருந்து விலகிச் சென்றுள்ளமையைக் குறிக்கும்

v) சமூகத்திற்கான நலனோம்புத்திட்டங்கள் அதிகரித்துள்ளமையைக் குறிக்கும் (.................)

(46) நீண்டகால நிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த விரும்பும் நாடு ஒன்றில் பின்வரும் சேர்க்கைகளில் பொருத்தமானது எது?

| | முதலீட்டு வீதம் | வட்டி வீதம் | சேமிப்பு வீதம் | வேலை வாய்ப்பு வீதம் |
|---|---|---|---|---|
| 1) | உயர்வு | உயர்வு | உயர்வு | குறைவு |
| 2) | உயர்வு | குறைவு | உயர்வு | உயர்வு |
| 3) | குறைவு | குறைவு | உயர்வு | குறைவு |
| 4) | குறைவு | உயர்வு | குறைவு | உயர்வு |
| 5) | உயர்வு | குறைவு | குறைவு | குறைவு |

(..................)

(47) இலங்கையின் சட்ட பூர்வமான வறுமைக்கோடு என்பது

i) மாதமொன்றிற்கான சராசரி கலோரிப் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டதாகும்
ii) மாதமொன்றிற்கான உணவுத் தேவை தொடர்பாக ஏற்படும் செலவினை அடிப்படையாகக் கொண்டதாகும்
iii) வருடமொன்றிற்கான உணவும் உணவல்லாத தேவையை அடிப்படையாகக் கொண்டதாகும்
iv) மாதமொன்றிற்கான உணவும் உணவல்லாத பொருள் மீதான மெய்ச் செலவை அடிப்படையாகக் கொண்டதாகும்
v) மூன்று மாத கால உணவும் உணவல்லாத பொருள் மீது ஏற்படும் செலவை அடிப்படையாகக் கொண்டதாகும் (..................)

(48) நிலைபேறான அபிவிருத்தியின் பிரதான கூறுகளை உள்ளடக்கிய தொகுதி

i) பொருளாதார, சமூக மற்றும் சுகாதார விருத்தி
ii) பொருளாதார வளர்ச்சி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு
iii) பொருளாதார வளர்ச்சி, சமூக வளர்ச்சி மற்றம் சூழல் பாதுகாப்பு
iv) நிறை தொழில் மட்டம் சமூகவிருத்தி, சமூக நீதி
v) பொருளாதார விருத்தி, பொருளாதார உறுதி மற்றும் தேசிய பாதுகாப்பு (..................)

(49) பின்வருவனவற்றுள் 2015ம் ஆண்டு துறைரீதியாக இலங்கையின் தொழில் நிலைப் பங்களிப்பு யாது?

| | வேளாண்மை | கைத்தொழில் | பணிகள் |
|---|---|---|---|
| 1) | 28.2 % | 26.0 % | 45.8 % |
| 2) | 26.0 % | 28.2 % | 46.0 % |
| 3) | 24.0 % | 28.0 % | 48.0 % |
| 4) | 34.5 % | 25.5 % | 36.0% |
| 5) | 20.7 % | 30.3 % | 49.0 % |

(50) 2015ம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் யாது?

(1) 1.0 (2) 1.1 (3) 0.9 (4) 0.6 (5) 1.8 (..................)

The National e-Learning Portal for The General Education

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2017

## Term Examination, June - 2017

| தரம் :- 13 (2017) | பொருளியல் II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:**

- உப பிரிவு "அ" உப பிரிவு "ஆ" ஆகியவற்றிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

உப பிரிவு "அ"

**(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க)**

(1) 1) ஆதனவளம், மானுடவளம் என்பவற்றை விளக்குக. அவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக?(4 புள்ளி)

2) பொருளியலில் அமையச் செலவு எனும் எண்ணக்கருவை விளக்கி அமையச் செலவு தோன்றுவதற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக. (4புள்ளி)

3) முயற்சியாளர் ஒருவரின் பிரதான முயற்சியாண்மைப் பணிகள் யாவை? (4புள்ளி)

4) தாராள சந்தைப் பொருளாதாரமொன்றில் விலையின் பிரதான தொழிற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (4புள்ளி)

5) பின்வருவனவற்றை யதார்த்தத்திற்குப் பொருத்தமான உற்பத்தி சாத்திய எல்லைக் கோட்டில் காட்டுக.

அ) விவசாய உற்பத்திக்குப் பொருத்தமற்ற வளங்கள் கைத்தொழில் உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்யப்படுதல்

ஆ) குறித்த நாட்டிற்கு எதிராக வெளிநாட் [illegible] 50 + 10P [illegible] உட்பாய்ச்சலைத் தடை செய்தல்

(தலா இரண்டு புள்ளிகள்)

(2) 1) சந்தைக் கேள்வி வளையியொன்றை வ[illegible] போது நிலையாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் யாவை? (4புள்ளி)

2) பின்வருவன எவ்வாறு பொருளொன்றின் [illegible]க்கும் நிரம்பல் தொகைக்கு மிடையிலான தொடர்பினை தீர்மானிக்கின்றன என விள[illegible]

FWC

அ) பொருளின் இலாபம்

ஆ) உற்பத்தி எல்லைக் கிரயம்

**தரம் :- 13 (2017) | இணைந்த கணிதம் –**

3) சாதாரண கேள்வி நிரம்பல் கோடுகளைக் கருதுக. பொருளிற்கான சந்தைக் கேள்வி வீழ்ச்சியடைந்த போதும் சந்தையின் சமநிலை அளவில் மாற்ற மேதும் ஏற்படவில்லை பொருத்தமான வரைபின் மூலம் விளக்குக. (4புள்ளி)

4) பின்வரும் சமன்பாடுகள் பொருளொன்றின் சந்தைக்கேள்வி மற்றும் நிரம்பல் சார்புகளை விபரிக்கின்றது

$$Qd = 150 - 10P$$

அ) சமன்பாடுகளைப் பயன்படுத்தி சந்தை சமநிலை விலையையும் சமநிலைத் தொகையையும் கணிப்பிடுக? (2புள்ளி)

ஆ) உலக சந்தைவிலை ரூபா 7 ற்கு இப்பொருள் இறக்குமதி செய்யப்படுமாயின் இறக்குமதியின் போது நுகர்வோர் மிகை மாற்றம் உற்பத்தியாளர் மிகை மாற்றம் என்பவற்றைக் கணிக்குக. (2புள்ளி)


இ) பகுதி (அ) பகுதி (ஆ) என்பவற்றை வரைபொன்றினால் காட்டுக? (2புள்ளி)

ஈ) இப்பண்ட உற்பத்தியின் மீது சிறப்பு அலகு வரியாக ரூபா 5 விதிக்கப்படுமாயின் நுக்வோர் மிகைவரிச் சுமையின் பெறுமதி யாது? உற்பத்தியாளர் மிகை வரிச் சுமையின் பெறுமதி யாது? (2புள்ளி)

(3) 1) "அளவுத்திட்ட சிக்கனங்கள்" என்பதனை செலவு வளையி ஒன்றின் மூலம் விளக்குக? (4புள்ளி)
2) பொருளியலாளர்கள் சாதாரண இலாபத்தை ஒரு செலவாகக் கருதுவதுடன் சிக்கன இலாபத்தை ஒரு செலவாகக் கொள்ளாதது ஏன்? (4புள்ளி)
3) "எல்லை விளைவு விதியினை" விளக்குக? (2புள்ளி)
4) உற்பத்தியில் குறுங்கால மற்றும் நீண்டகாலம் என்பவற்றை வேறுபடுத்துக? (2புள்ளி)
5) நிறைபோட்டி நிறுவனம் ஒன்றினது குறுங்கால செலவு நடத்தையினைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.

அ) நிறுவனம் பண்டத்தினை விற்கத் தயாரகவுள்ள ஆகக்குறைந்த நிரம்பல் விலை மற்றும் வெளியீடு யாது? (2புள்ளி)
ஆ) சந்தை விலை 20 ரூபாவில் உற்பத்தியாளர் மிகை மற்றும் சிக்கன இலாபம் எவ்வளவு?(2புள்ளி)
இ) நிறுவனத்தின் நிலையான செலவுகள் யாது? (2புள்ளி)
ஈ) சந்தைவிலை 15 ரூபாவாயின் நிறுவனம் சிக்கன இலாபத்தை உழைக்க முடியுமா ஏன்?(2புள்ளி)

(4) 1) வருமான வழிமுறையிலான தேசியக் கணக்கீட்டில் "முதனிலை வருமானங்கள்" (Primary income) என்பதனை விளக்கி அதன் உள்ளடக்கங்கள் நான்கினையும் குறிப்பிடுக? (5புள்ளி)
2) இடைநிலை உள்ளீடுகள் (inter mediate Inputs) மற்றும் முதனிலை உள்ளீடுகள் (Primary Inputs) ஆகியவற்றை விளக்குக. (4புள்ளி)
3) உற்பத்திக் கணிப்பீட்டில் இடம்பெறும் "பல்கணிப்பீட்டுப்பிரச்சனை" என்பது யாது? அது எங்ஙனம் தீர்க்கப்படுகின்றது என்பதை உதாரணத்துடன் விளக்குக. (5புள்ளி)
4) தேசியக் கணக்கீடு தொடர்பாக பின்வரும் பொருளாதாரத் தரவுகள் கீழே தரப்படுகின்றன. (யாவும் மில்லியன் ரூபா)




| வகை | தொகை |
|---|---|
| உற்பத்தி மீதான மானியம் கழித்த வரிகள் | 600 |
| கைத்தொழிற்பொருட்களின் இடைநிலை நுகர்வு | 3500 |
| தொழிற்பாட்டு மிகை | 7000 |
| கலப்பு வருமானம் | 3500 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதி மீதான தேறியவரி | 1500 |
| உழைப்பு வருமானம் | 5000 |
| நிலையான மூலதன நுகர்வு | 600 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | 1200 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக?
1) முதனிலை வருமானங்களின் (Primary income) பெறுமதி யாது? (2புள்ளி)
2) மொத்த உள்நாட்டுற்பத்தியின் பெறுமதி யாது? (2புள்ளி)
3) சந்தை விலையிலான மொத்தத் தேசிய வருமானத்தின் பெறுமதி யாது? (2புள்ளி)

(5) கற்பிதமான பொருளாதாரமொன்றில் நுகர்வோர் வருமானம் 100மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் போது நுகர்வோர் 40 சதவீத வருமானத்தினை சேமிப்பு அதிகரிப்பிற்காகப் பயன்படுத்துகின்றனர். எஞ்சிய வருமானம் நுகர்வு அதிகரிப்பாகும்.

1) நுகர்வுச் சார்பு மற்றும் சேமிப்புச் சார்புகளைத் தருக? (4புள்ளி)

2) இப்பொருளாதாரத்தில் 200 மில்லியன் தனியார் முதலீடு மேற்கொள்ளப்படும் அதேவேளை 100 மில்லியன் அரசாங்கச் செலவீடும் மேற்கொள்ளப்படுமாயின் சமநிலை வருமான மட்டம் யாது? (4புள்ளி)

3) பொருளாதாரத்தின் சமநிலையினை வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுக? (4புள்ளி)

4) நிறை தொழில் மட்ட வருமானத்தைப் பேணும் வகையிலான மொத்தக் கேள்வி (AD) மட்டம் 3000 மில்லியன் எனில் பணச்சுருக்க இடைவெளி யாது? (4புள்ளி)

5) பொருளாதாரத்தில் அரசு தலையிடுவதாகக் கருதுக?
100 மில்லியன் ரூபா வரியினை அரசு விதிக்குமாயின் சமநிலை வருமானம் நுகர்ச்சி மற்றும் சேமிப்பு என்பவற்றில் ஏற்படும் மாற்றம் யாது? (4புள்ளி)

## உப பிரிவு "ஆ"

(இப்பிரிவிலிருந்து குறைந்த பட்சம் இரு வினாக்களைத் தெரிவு செய்க)

(6) 1) பணத்தின் பெறுமானத்திரட்டுத் தொழிற்பாட்டினை குறிப்பிட்டு அத்தொழிற்பாட்டின் அமையச் செலவினை விளக்குக. (5புள்ளி)

2) தற்போது இலங்கை மத்திய வங்கியானது நாணயக்கொள்கைக் கட்டமைப்பில் ஏற்படுத்திய மாற்றங்கள் எவை? (4புள்ளி)

3) வங்கிக் கட்டமைப்பில் பணவாக்க ஆற்றலைக் குறைக்கக்கூடிய வகையில் வங்கியிடமிருந்து வெளிப்பாய்ச்சல் நடைபெறக் கூடிய வழிகளை இனங்காண்க? (4புள்ளி)

4) கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் பணநிரம்பல் $(M_1)$ ரூபா 4200 பில்லியனாகவும் பொதுமக்களின் வங்கி வைப்புக்கள் 4000 பில்லியனாகவும் நியதி ஒதுக்கு 20% ஆகவும் இருப்பதுடன் வங்கிகளின் மிகையொதுக்கு 200 பில்லியனாகவும் காணப்படுவதாகக் கருதுக.

அ) பொருளாதாரத்தில் பணப்பெருக்கியின் பெறுமானம் யாது? (3புள்ளி)

ஆ) பொருளாதாரத்தில் பணநிரம்பல் $(m_1)$ 200 பில்லியனால் அதிகரிக்க வேண்டுமாயின் மத்தியவங்கி யாது செய்ய வேண்டும்? (2புள்ளி)

இ) மத்திய வங்கி வணிக வங்கியிடமிருந்து 100 பில்லியன் நிறைசேரி உண்டியலைக் கொள்வனவு செய்யுமாயின் பணநிரம்பலில் எத்தகைய மாற்றம் நிகழும்?(2புள்ளி)

(7) 1) சந்தைத் தோல்வி ஏற்படுவதற்குரிய காரணிகளைப் பெயரிடுக. (4புள்ளி)

2) உற்பத்தியில் நேர்கணிய மற்றும் எதிர்கணிய வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் வகிபாகம் யாது? (4புள்ளி)

3) புறச்செலவுகள் உள்ள நிலையில் சந்தை முறைமையின் வெளியீடு மிகையாகக் காணப்படுவதேன்? வரைபட உதவியுடன் விளக்குக? (4புள்ளி)

4) வரிவிதிப்பில் "நியாயத்துவம்" என்பதை விளக்குக. (4புள்ளி)

5) இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதிகாணும் மூலகங்கள் எவை?(4புள்ளி)

(8) 1) A,B ஆகிய நாடுகள் ஓர் அலகு உள்ளீட்டைப் பயன்படுத்தி $x$,y ஆகிய பண்டங்களை வெளியீடு செய்யும் நிலைமையினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| பண்டம் | நாடு A | நாடு B |
|---|---|---|
| X | 20 | 10 |
| Y | 12 | 15 |

அ) இரு நாடுகளதும் $x$ ,$y$ பண்ட உற்பத்திகள் தொடர்பான அமையச் செலவுகளைக் கணிக்குக? (2புள்ளி)

ஆ) இரு நாடுகளிடமும் தலா 10 அலகு உள்ளிடுகள் உள்ளன. எனின் இரு நாடுகளதும் உற்பத்தி எல்லையினை வரைக? (2புள்ளி)

இ) இது நாடுகளும் வளங்கள் முழுவதையும் ஒப்பீட்டு நன்மையுள்ள பண்டம் மீது ஒதுக்கீடு செய்யமாயின் அவற்றின் உற்பத்திப் புள்ளிகளை வரைபிற் காட்டுக. (2புள்ளி)

ஈ) இரு நாடுகளும் ஒன்றிற்கு ஒன்று எனும் விகிதத்தில் வர்த்தகப் பரிமாற்றம் செய்யுமாயின் நுகர்வுச் சாத்திய வளையி எவ்வாறு அமையும்? (4புள்ளி)

2) பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் மற்றும் மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் ஆகிய இரண்டினையும் வேறுபடுத்துக? (4புள்ளி)

3) இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பில் உண்டான சதவீத மாற்றங்களை பரிசீலிக்குக.(4புள்ளி)

4) இலங்கையின் பிரதான இறக்குமதி வகைகளைப் பட்டியலிடுக? (2புள்ளி)

(9) 1) பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் வேறுபடுத்துக?(4புள்ளி)

2) பொருளாதார வளர்ச்சி வீதத்தினை அதிகரிப்பதில் அரசின் வகிபாகம் யாது? (4புள்ளி)

3) நாடொன்றின் உற்பத்தித் திறன் மட்டத்தைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளைப் பெயரிடுக? (4புள்ளி)

4) பேண்தகு அபிவிருத்தியென்றால் என்ன? பேண்தரு அபிவிருத்தியின் முக்கிய மூன்று கூறுகளும் எவை? (4புள்ளி)

5) இலங்கையின் பொதுவான தலைக்குரிய வறுமைச் சுட்டெண்ணின் போக்கினைப் பரிசீலிக்குக? (4புள்ளி)

(10) 1) இலங்கை எதிர்நோக்குகின்ற பரந்தளவிலான சுற்றாடல் சவால்களை இனங்காண்க.(5புள்ளி)

2) இலங்கையில் குடும்ப அலகு வருமானத்திற்கு மேலதிகமாக வறுமையின் பல்புடைத்தன்மையில் உள்ளடங்கும் விடயங்கள் யாவை? (4புள்ளி)

3) வறியோரின் கீழேயுள்ள பிரிவினரின் தேவைகளைத் தீர்ப்பதற்கு அரசின் நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தை அதிகரிப்பதற்கு மேலதிகமான பேரண்ட மட்ட முன்னெடுப்புக்களைக் குறிப்பிடுக? (4புள்ளி)

4) இலங்கையில் வேலைவாய்ப்பு விகிதம் எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது? (2 புள்ளி)

5) மொத்த தங்கியிருத்தல் விகிதம் என்றால் என்ன? இலங்கையில் அது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது? (5புள்ளி)